
ஓடியன் புதிய ரிக்கார்டு

தஞ்சாவூர் M. சாரதாம்பாள் பாடியது.

கண்ணிகள்.

ஆசை மச்சானே பேசிடுங்கோ
நீங்க பேசிடுங்கோ
நீங்க பேசிடுங்கோ ஆசை

அத்தைபெற்ற லெச்சைகெட்ட மச்சான் நீங்க
காசுதந்த மையல் கட்டழகா—என்னைக்
காணவந்த கோணத்தலை குட்டழகா
கள்ளுவெறியாலே கடைத்தெருவுமேலே
தெள்ளுமணிபோலே சிறிக்கியென்முன்னாலே
போனாயோ போக்கிரியே புத்திகெட்ட அசமந்தமே
வீணான நிர்ப்பந்தமே
வேண்டாமிவ்வொப்பந்தமே
வெட்டுண்டு போவாயடா—பத்தினி நான்
வேறுமுகம் பாரேனடா ஆசை

கட்டிக்கொண்டுவந்து விட்டுவிட்டு—பொல்லா
கங்காணிபோலேவழி தட்டுக்கெட்டு
குட்டிமார்களையுங் கூட்டிக்கிட்டு—என்னை
குத்தவச்சுவிட்டுப்பணம் வாங்கிக்கிட்டு
கூறுகெட்ட மாமா குணமிழந்து போமா
நேரங்கெட லாமா நினைவிழந்து போமா
நீலங் கருத்தவனே
நெஞ்சிலெனைக் காத்தவனே
மாலப் பழுத்தவனே
பக்கிரிசாமி யிதனே
பஞ்சாயம் கூட்டிடுவோம்—நீயும் நானும்
பாரபக்ஷம் பார்த்திடுவோம்—நம்ம
பாரபக்ஷம் பார்த்திடுவோம் ஆசை

பின்பக்கம்

பசும் பால் வாங்கலையோ
நல்ல பால் வாங்கலையோ
பசும் பால் வாங்கலையோ—நல்ல
பக்குவமாக நீர் தங்காமல் காய்ச்சிய பால்
சர்க்கரை கேளாது தன்சுவை மாறுது
மிக்கப் புதியது விடியக் கறந்தது
நெய்வெண்ணெய் பால்தயிர் நேர்மையாய்ச் செய்யலாம்
நீடித்திருந்திடும் பால் கோவாகிண்டலாம்
கருப்பட்டி டிக்காஷன் காப்பியில் சேர்க்கலாம்
கண்டமட்டும் சோற்றில் விட்டுப்புசிக்கலாம் பா
பால் தயிர் மோர்
பாலோ பால்
தயிரோ தயிர்
மோரோ மோர்
பால் வாங்கலையோ—பால்
தயிர் வாங்கலையோ— தயிர்
மோர் வாங்கலையோ

ஓடியன் புதிய ரிக்கார்டு

P. S. சிவபாக்கியம் பாடியது

(குறத்தி பாட்டு.)

கண்ணிகள்

கூடைமுறங் கட்டுவோம் குறிசொல்லுவோம்—நாங்கள்
கோணமான பச்சைகளெல் லாங் குத்துவோம்—பெருங்

காடுமலே மேடுகளில் குடியிருப்போம்—எவர்க்கும்
கைகளேயும் பார்த்து ரே கை சொல்லுவோம்—இன்னும்
சேராத பெண்ணெல்லாம் நாங்கள்
சேரும்படி செய்வோம்—தேடி
வராத பெண்ணெல்லாம் கிட்ட
வரும்படிக்குச் செய்வோம்—கேளு
இன்னுஞ் சில வேறுமருந் தென்னிடத்திலே
இருக்குதிப்போ கைவசத்தி லே வுனக்குவேணுமா
சொன்ன சொன்னபடி யேயிருக்கும்—எங்கள்
சோதனை தெரியுமெல் லாப் பேருக்கும்—ஆனல்
என்னடாவென் றிப்போதிருக்கும்—நீ முன்
எண்ணியதுபோலவே பின்னலே நடக்கும்—உனக்கு
வேணுமான கூறு—அப்படி
விலகியிருந்து பாரு—என்மேல்
சாமிவரும் நேரு—அது
சாற்றுவதைத் தேரு—என்ன
சாமியை யழைக்கட்டுமா-அழைத்துனக்கு நான்
சங்கதியைச் சொல்லட்டுமா
சொல்லு சீக்கிரம் சொல்லு சீக்கிரம் சொல்லு சீக்கிரம் (கூ

ஓடியன் புதிய ரிக்கார்டு

P. S. சிவபாக்கியம் பாடியது

சந்தா காருண்யனே என்ற மெட்டு.

கண்ணிகள்.

ராஜி உடன் படிக்கை
முக்ய நட வடிக்கை
தேச குடி படைக்கே
நன்மை தரும் படிக்கே

தொகையரா.

வைசிராயின் மாளிகையில்
வார்த்தை பேசிய நேர்த்தியாம் ராஜி
சாந்த மிகுந்த காந்தி வகுத்த
சாத்விக சட்ட மறுப்பையும்
தடுக்கும் சர்க்கார்
அடக்கு முறையின்
தாண்டவத்தையும் நிறுத்தியே
உப்பு வரி யொழித்தார்
ஒப்பியது மதித்தார்-அதிகார வர்க்கம்
காங்கிரஸைத் தாங்கி நின்ற
கைதிகளை விடுவித்தனர் ராஜி

ஓடியன் புதிய ரிக்கார்டு

P. S. வேலுப்பிள்ளை பாடியது

(காமிக்)

குடித்தனத்தில் லிருந்த பெண்ணைக்
கொண்டுவந்தான் பார்ப்பான்—அவன் குடி
பெரிய குடித்தனத்திலே—
நல்ல குடித்தனத்திலே—அந்த குடி
கொண்டுவந்தான் பார்ப்பான்
கொண்டு ஒரு கை பார்ப்பான்—நான்
கூட இருந்து பார்க்காவிட்டால்
குட்டி உங்களை ஏய்ப்பான்

அடுத்துக் கெடுக்க வந்து இரா சாங்கத்தில் பிறந்து
தீரா கோபிகட்கு ஏமாற்றுங் கன்னிகளா—அடி
எங்கள் அன்னிகளா—அடி

இருக்கட்டும் உங்கள் பேச்சு—இதை
எடுத்துச்சொன்னால் ஏச்சு—இதை
சிரிக்க வைக்க வழி யாச்சு—உங்கள்
ஜென்மம் வீணாய்ப் போச்சு குடி

கட்டி வைத்து கண்டிக்குப்போன
கணவன் நானிருக்க—அந்த
தட்டிப்பறிக்கும் தடிகளுடனே
போகலாமோ சிரிக்க
எட்டி மரத்து ஓரம்—நீ
போகலாமோ சோரம்—அடி
குட்டி போன வாரம்—நீ
பட்டது அபாரம்—அடி
மானங் கெட்டவளே—ஒரு கூடை
மாங்காய் விற்றவளே
ஈனங் கெட்டவளே—பயல்களை
தம்பிக் கெட்டவளே

தாசியைப்போல் சேலை கட்டி—அடியே குட்டி நீ
வேசியைப்போல் நடக்கும் குட்டி
காசுக்காக அணைத்துக்கட்டி
கண்டவனை சேருங் குட்டி குடி

———

ஓடியன் புதிய ரிகாாட்

P. S. வேலுப்பிள்ளை பாடியது

தெய்வமிருக்குதொரு பக்கத்திலே—இந்த
சீமை நடக்குதையா ரொக்கத்திலே—பழைய
சைவமிருக்குதின்னும் தர்க்கத்திலே—குறிகள்
சாஸ்திரமிருக்குதென் கக்கத்திலே
முத்தமிழ் இருக்குது மூலையிலே—எ தெய்வங்களா
இங்கிலீஷ் நாட்டியமாடுது காலையிலே—நல்ல
சர்க்கார் இருக்குது ஞாயத்திலே—பொய்
சாக்ஷியுரைக்கும் பண மாயத்திலே
பணத்துக்காக சாக்ஷி
குடிக்கிறதுக்கு சாக்ஷி
சொர்க்கம் இருக்குது மானத்திலே—தேரணும்
சுகம் இருக்குது பெண்கள் தியானத்திலே
ஜாதி மதம் போச்சே
சமத்துவமுண் டாச்சு
நீதியென்ற பேச்சு
கிழவியும் பேச லாச்சு
இப்படியாய் உலகம்—இருந்தால்
எப்படி நாம் பிழைப்போம் தெ

ஹூட்சன் புதிய ரிக்கார்டு
ஹார்மோனியம் மிஸ்.

M. R. வாஸவாம்பாள் பாடியது

தெம்மாங்கு

மலையோரம் மாமரமாம் மாமாமாரு குத்தகையாம்
காய்க்குதில்லை பூக்குதில்லை கண்மணியே உன்மயக்கம்

வேறு

கொக்குப் பறக்குதடி கோம்பைமலை முன்னிலையில்
அங்கம் பறக்குதடி ஆணிமுத்தைக்காணாமல்
மங்கம்மாசாலை மலைமேலே—எங்கள்
மதுரைக்குப்போற வழிமேலே

வேறு

கானக்கருங்குயிலே களையெடுக்கும் பெண்மயிலே
நீலக்கருங்குயிலே நிக்கட்டுமா போகட்டுமா
ரெங்கோனுக்குப் போறேனென்று தங்கையிடஞ்
[சொல்லாமலே
கருங்கடலில் போகும்போது கலங்குதடா என்மனது

பின்பக்கம்

படகு பாட்டு

துள்ளிக்கோல் வெள்ளிபோலும் சோரால்வேரால் ஏரால்
[பாயும்
கள்ளிக்கோட்டை கடலுக்குள்ளே கடகடனு படகுதள்ள
நானும் மேலேறிக்கொண்டு வருகுவேனே
நாகப்பா சிநேகப்படி தருகுவேனே
ஆணலையும் பெண்ணலையும் அடுக்கடுக்காய் கரைக்குவர
காணலையோ சிப்பிமுத்து கரைமணலில் கதிர்வீசும்
மாலையிந்த நேரமிரு பேருமாக
கோலமுடன் கடலுலாவி மேடேறுவோம்
நாகப்பா துடுப்பெடுத்து படகு தள்ளு
தள்ளு தள்ளு ஏலேலோ படகு தள்ளு
படகு தள்ளு ஏலேலோ படகு தள்ளு
அயிலலோ படகு தள்ளு

ஏலேலோ படகு தள்ளு ஏ மாமா படகு தள்ளு
ஏ மச்சான் படகு தள்ளு ஏ சாமி படகு தள்ளு
படகு தள்ளி மனம் பழகும் புள்ளி
உடலுருக அரபிக் கடலருகே
என்னுடனிருந்து கடலுலாவி வந்து
கனகமுத்துச்சாமிக் கவி பகர்ந்து; துள்

கொலம்பியா புதிய ரிக்கார்டு

D. R. முத்துலக்ஷிமி

இராகம்-பியாக்—தாளம்-ஆதி.

பல்லவி

மடமாதரொடு நாதர் விளையாடுறார் மட
மகிழ்வாகவே களித்திடும் மட
மன்னர் விளையாடுறார்
அதோ விளையாடுறார்
எதிரில் விளையாடுறார்

மகுடம்

மதரதியென எதிரினில் நிதம் மட
மங்களந்ததும்பிடும் அஞ்சொல்லை மொழிந்திடும்
இங்கித மடைந்திடும் மட
மட்டத்திருமல்லி புஷ்பத்தினை யள்ளி
இஷ்டத்தொடு புல்லி இறைந்திடச்சொல்லி மட

சரணம்

மன்னவர்களைப்போல மாது நீருமே ஜால
மகிழ்ந்து கலந்து இணைந்திடுவோமே
சுகந்தமணிந்து நலங்கொள்ளுவோமே மட

ஓடியன் புதிய ரிக்கார்டு
மதுரை M. கண்ணம்மாள் பாடியது.

இராகம்-அடாணா, தாளம்-ஆதி.

பல்லவி

கதரோ கதர் கதர்வாங்க வில்லையா—அதைக்
கட்டுமென் றும்மைக்கும் பிட்டுச்சொன்னேன் சுத்தக் கத

அநுபல்லவி

மதபேதமில் லாதல்லாஹூ அக்பர்
மந்தத்தொனியின்பத்தின் விளங்கத்வித நெஞ்சத்துயர் கத

சரணம்

ரோமாபுரியில் பட்டாடை நெசவில்
ருசிக்கப் பிறந்த கதர்—சர்வ
லோகாபிமான சக் ராயுத ராட்டினம்
நூற்கச் சிறந்த கதர்
சாம தான பேத தண்டம் புரி கதர்
சாத்வீக வாளைத் தரித்த கரக்கதர்
பாமரர் கோபத்தை பங்கஞ்செய்யுங் கதர்
பஞ்சப்பிணி வஞ்சக்கலி
யுஞ்சப்புவ னஞ்சுற்றிய கத

ஆறுவருஷம் சத்யாக்ரக வாசத்
தடைக்கலமென்ற கதர்—நமக்
காக்கத்தை யுண்டாக்கும் துன்மார்க்கத்தைப் போக்கும்
அடாணா படிக்கும் கதர்
மாறும் விவேக வளமை சொல்லாக் கதர்
வாக்கிய சிதம்பரம் மங்களஞ் சொல் கதர்
சோறுந்துணியும் சுகமுந் தருங்கதர்
துஷ்டக்குண சட்டக்கல
கக்கக்கெலி கொட்டிப்புகழ் கத

பின்பக்கம்

இராகம்-அசாவேரி, தாளம்-ஆதி.

கண்ணிகள்

சத்யமெங்கு மேதளரா நாடு—இந்து
தேசமதைப் புகழ்ந்து பாடு—இது
வித்யாதுகூலமுள்ள நாடு—இதில்
விளையுமல்லவோ சொர்ண மேடு சத்ய
கைத்தொழிலை விர்த்திசெய்ய வாதா—இதர்
கன்னியரி யந்த்ரமென்ன தோதா—உள்ள
புத்தியும் நமக்குப்போ தாதா—காந்தி
போதனை நமக்குவொண் ணுதா சத்ய
மங்கள முடிக்கும் மனத் தலைவா—பிர்மன்
முடிச்சு அன்னிய நூலின் விளைவா—அது
மங்கையர் கழுத்தில் வந்து விழவா—அதற்கு
மாங்கல்யமென்ற பெயருந் தரவா சத்ய

K. S. தேவுடு அய்யர் பாடியது

தங்கரத்தின மெட்டு

செஞ்சுருட்டி

கண்ணிகள்

பாலசுப்ரமண்யனடி பக்ஷமுள்ள கண்யனடி
சீலகுணசாமியான ஞானஷண்முகனே—எங்கள்
தெய்வகுருநாதனடி மோனஷண்முகனே
செந்தி நகர் வேலனடி சிங்கார லோலனடி
தொந்திவயிற் தம்பியான ஞான ஷண்முகனே
துணையா யிருந்தவண்டி மோனஷண்முகனே

பிரணவப்ர சித்தனடி பேரமைந்த சுத்தனடி
தருணங்கள் பார்த்தருள்வான் ஞானஷண்முகனே—எந்தன்
தந்தையைப்போல் கார்த்தருள்வான் மோனஷண்முகனே
கழுகுமலைக் கந்தனடி காவடிக்குச் சொந்தனடி
அழகுபெறவே பறந்தான் ஞான ஷண்முகனே—அவன்
அற்புத விசாலனடி மோன ஷண்முகனே (பா)

பின்பக்கம்

இராகம்-ஹிந்துஸ்தான் அமீர், தாளம்-ஆதி.

பல்லவி

கந்தா செந்தூரில்மேவும் காருண்யா குகா ஷண்முகனே கந்

அநுபல்லவி

வந்தான் சிவன் மகிழும் மாது சக்தி வேல்கரனே
இந்தாவென்றுனது அருள் தந்திடாதேனோ பரனே கந்

தொகையரு

கலியுகவரதனே கதிர்காமக் கடவுளே
கார்த்திகை தீப மெய்யனே
எளியேனுன் படுந்துயர் அகற்ற இது தருணமா
ஈராறு கையனே.

அநுபல்லவித் தொடர்

இந்தாவென்று உனதருள் தந்திடாதேனோ பரனே
கொண்டாடியே சதாவும் கோருந் துரைராஜன் கந்

M. R. வாசுவாம்பாள்

பிள்ளைத்தமிழ்

இராகமாலிகை

விருத்தம்

இறகுமரை ஞாணிணிப்பூட்டேன் இலங்குமகர குண்டலத்தை
யெடுத்துக்குழையில் மீதணியேன் இனியுன்முகத்துக் கேற்கவொரு
சிறுகுந்திலகந்தனைத் தீட்டேன் திருககண்மலர்க்கு மையெழுதேன்
செம்பொற்கமலச் சீரடிக்குச் சிலம்புதிருத்தே னெறித்துவிமமி
முறுகுமுலைப்பாலினிதூட்டேன் முகம்பார்த்திருந்து மொழிபகரேன்
முருகாவருக சிவசமய முதல்வாவருக திரைகொழித்து
மறுகுமலைவாய்க் கரைசேர்ந்த மழலைச்சிறுவா வருகவே
வளருங்களபக் குறும்பைமுலை வள்ளிகணவா வருகவே.

பின்பக்கம

இராகம்-இந்துஸ்தான் அசாவேரி, தாளம்-ரூபகம்.

பல்லவி

மனமே வீண் கர்வமே அடையாதிரு (மன)

அநுபல்லவி

தினமுமாய்கையால் தேவர் மூவர்தான்
செயலிழந்துமே சிதறிவாடினார் (மன)

சரணம்

ஆசைபாசமே அகந்தையின் தாயாம்
அறிவைக்கெடுக்கும் பேயாகிய நோயாம்
அறிய ஞானிகளே யணுகிடாது துயர்,
அருந்தமிழ் பாஸ்கர கீத போதம்பெறு (மன)

ஹட்ஸன் புதிய ரிக்கார்டு

ஹார்மோனியம் K. S. தேவுடு அய்யர்

இராகம்-இந்துஸ்தான் காபி.

கண்ணிகள்

ஞான கான வேலா உனை நாடினேன் சுசீலா
கான வள்ளி லோலா எனைக் கார்க்கவா விசாலா
இன்பமேவுங் கந்தா எனக் காக நீ வரந்தா
அன்பர் பால் மனந்தா அர ஞர் தமக்குமைந்தா
தந்தைக்குப தேசம் செய்த சாமியே வுன்நேசம்
சிந்தையில் உன் வாசம் தினம் திவ்யமந்த்ரகோசம்
சஷ்டி ஞான பூர்த்தி வா ஷண்முகா மெய்மூர்த்தி
அஷ்டயோக கீர்த்தி எங்கும் ஆனந்தக் கண்பூர்த்தி ஞா

பின்பக்கம்

இராகம்—செஞ்சுருட்டி.

சுந்தரம் நிறைந்த திருச் செந்தில்பதி வந்தமர்ந்து
சுப்ரமண்ய னெனும் ஜெய முருகோனே
சுத்த தத்துவம் மிகுந்த சக்தியளித்த விசித்ர
முத்துரத்னம் வைத்திழைத்த வடிவேலா

நாதநாமக்கிரியை

அந்திவண்ணன் சிந்தைமகிழ் மந்திரத்தை முன்னுரைத்த
அத்திமுகனுக்கிளைய குருநாதா
அண்டிவரும் தொண்டர்துயர் கண்டுவரம் நன்றுதரும்
அற்புத மகிமை தங்கும் குமரேசா

(பின் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தபைரவி.

சந்ததமும் உந்தன்பதம் தஞ்சமென்று கொஞ்சுமெந்தன்
சஞ்சலந் தனையகற்ற வருவாயே
சந்தநிறை செந்தமிழின் கந்தனென சொந்தமுடன்
வந்தனமும் செய்யுந் தஞ்சை துரைராஜன்

ஓடியன் புதிய ரிக்கார்டு

V. A. செல்லப்பா

இராகம்-காப்பி—தாளம்-ஆதி.

பல்லவி

வள்ளிமானே ஒரு புள்ளிமான்
ஏ—வள்ளிமானே ஒரு புள்ளிமான்
அடி—வள்ளிமானே ஒரு புள்ளிமான்—இங்கே
வந்ததுண்டோ சொல்வாயடி (வள்)

அனுபல்லவி

தெள்ளு தினைப்புனத்தில் தெய்வரம்பை போல
உள்ளம் முழுவதையும் கொள்ளைகொள்ளப் பிறந்த (வள்)

சரணம்

நம்பிக்கையுள்ள மான் நம்பி வளர்த்த மான்
செம்பொற் சிவமான் சித்திமான் சித்திமான்
நானிலம் புகழுமான் நாரதர் மெச்சும் மான்
சூடி சுந்தரமான் சொற்பிரகாச மான் (வள்)

கோலம்பியா புதிய ரிக்கார்டு

S. G. கிட்டப்பா

(இராக மாலிகை)

பல்லவி

எனக்கேதாரமா வாயடி
இனியேதுணை லேசில் விடேனடி (என)

அநுபல்லவி

உனக்கேயெந்தன் மனமுருகுதடி
உள்ளத்தில்காம வெள்ளம்பெருகுது (என)

சரணம்

நினைத்தேடி வந்த என்னை
நீ வெறுக்கா லாமோ தானே

மனத்தினிலின்னம் வர்மமுமேனோ
வஞ்சி நீ செய்வது வஞ்சகந்தானே (என)

காந்தர்வக் கல்யாணமே
கைக்கொள்ள ப்ரமாதமே
கன்னல்பரவும்மொழி சாந்தகுணகரி நீ
சஞ்சல விஞ்சித நெஞ்சக (என)

ரஞ்சித மோகன லாவண்யமாதே
ரமிக்கத்தகுந்த சமயமுமீதே
அஞ்சுகபாஸ்கரன் தண்டமிழ்ப்போதே
அணைத்திடிலென்னுயிர் துணைக்குந்தப்பாதே (என)

கோலம்பியா புதிய ரிக்கார்டு

மிஸ். K. B. சுந்தராம்பாள்

இராகம்-தேசிகதோடி—தாளம்-ஆதி.

பல்லவி

வழிமறைந் திருக்குதே-மலைபோலேயொரு
மாடுபடுத் திருக்குதே

அநுபல்லவி.

பாவிப்பறையனிந்த ஊரில்வந்துமிவன்
பாவந்தீராதேவுந்தன் பாதத்தில் சேரேனோ
சேரேனோ சிவலோக நாதா (மாடு)

சரணம்

தேரடியில் நின்று தெரிசித்தாலும் போதும்
கோவில்வர மாட்டேனே ஐயா
ஓரடிவிலகினால் போதுமங்கே நின்று
உற்றுப்பார்க்கச் சற்றே விலகாதோ (மாடு) (வழி)

போலிப் புத்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். ஒவ்வொரு புத்தகத்திலும் A. M. சந்நியாசியா பிள்ளை பதிப்பித்ததாவென்று பார்த்து வாங்கவும்.

ஓடியன் புதிய ரிக்கார்டு

காயனபடு கீர்த்தனபடு

C. சரஸ்வதிபாய்

பல்லவி

ஆண்டவன் தவ வேடம் எடுத்தார்—குப்பல் ஆண்

அநுபல்லவி

ஆடித்தள்ளாடியே அரசன் முன்னடுத்தார் ஆண்

சரணம்

வேண்டும் ஆசையால் கூட்டிக்கொடுத்தார்
வேடர்வேந்தனும் யாரென்று கேழ்க்கவேதொடுத்தார் ஆண்

பின்பக்கம்

பல்லவி

அய்யா பரதேசி நீர் யாரோ—நீர்
அனுதினமும் வாழ்ந்திருப் பது எந்த வூரோ அய்

அநுபல்லவி

மெய்யாகவே சொல்வீர் என்னபேரோ—என்னை
விரும்பிவந்தது முன்னுன் செய்திடும்தீதோ அய்

S. G. கிட்டப்பா

இராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி

சரவணபா தமியேனெனையாள் (சர)

அநுபல்லவி

பரமகருணா கரனுனையலால்
பாரிற்பாரியான பரமனுதலால் (சர)

சரணம்

இகபரசுகம் தனை விரும்பினேன்
இதனால் எதுவும் பெறுது வெம்பினேன்
ஜெகம்புகழும் நின் சேவடி நம்பினேன்
செய்வதொன்றும் தெரி கிடாதியம்பினேன் (சர)

பின்பக்கம்

இராகம்-கானடா, தாளம்-ஆதி.

கண்ணிகள்

மதியில்லா மூர்க்கருக்கோர் மகிமையில்லை
வாசமில்லா புஷ்பத்தை மதிப்பாரில்லை
குஷியில்லா பாவினர்க்கோர் சுகமுமில்லை
சதிசெய்யும் சண்டாளர்க்கு சத்யமில்லை
தந்தைவிதிச் செயலைத் தடுப்பாரில்லை
நதியில்லாவூர்களுக்கோர் அழகுமில்லை
நாரியர்சொல் கேட்பவருக்கு ஞானமில்லை (மதி)

ஓடியன் புதிய ரிக்கார்டு

V. A. செல்லப்பா

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

பல்லவி

குலநலப் பெண்ணாள் திலகம்—இவளையென்று
கூறுமெய்யாக உலகம் (குல)

அநுபல்லவி

நலந்தரும் தென்குறத்தி நிலம்புகழ் வேடுவச்சி
நவரசம் பெருகிட ஆலோலத்துடன்
கவணெறிகின்றனள் · ஆகாசத்தினில் (குல)

சரணம்

நீரும்பாலும் நெய் தேனும் என்னலாம்
நன்று பல்வி பிடி குணத்தை—குழிவெண் மதி
வெலொடும் கண் மலர் பூத்திடும்
விதநல இவள் முகத்தை
வானோர் சொலும் வாசோருக்கும் சிறந்திடும்
வாலிபனொரு குறைமக ளான தூயசிங்காரி (குல)

கோலம்பியா புதிய ரிக்கார்டு

D. R. முத்துலட்சுமி

நாதநாமக்கிரியை

கண்ணிகள்

மீசை நரைத்துப் போச்சே—கிழவா
ஆசை நரைக்க லாச்சோ
பாசம் வருக லாச்சே—கிழவா
பாவம் விலகிப் போச்சோ
கூனுகுறுகிப் போச்சே—கிழவா
கோபம் விலகிப் போச்சோ
அங்கந்தளர்ந்து போச்சே—கிழவா
ஆங்காரமும் போச்சோ
சேரியை மறந்தாயே—கிழவா
சிதம்பரம் நினைந்தாயோ
மானிட ஜென்மமடா—கிழவா
மாண்டால் வருமோடா

அம்பலத் தரசனடா—கிழவா
ஆளுந் தெய்வமடா
திருவடி பணியாயோ—கிழவா
தேடித் தெளியாயோ

ஓடியன் புதிய ரிக்கார்டு

T. M. சாரதாம்பாள்

பல்லவி

காந்திரிஷி நம்மைக்
காத்திடும் கருணாநிதி (கா)

அநுபல்லவி

காந்திரிஷி நல்ல காந்திரிஷி—வெகு
சாந்தரிஷி நம்மைக் காத்திடுங் கருணாநிதி (கா)

சரணம்

ஆய்ந்த சுதேச மக்கள் ஆஸ்தியாகவந்தவர்
ஆழியினும் பொறுமைகாட்டி ஆதிக்கமாய் நின்றவர்
தேர்ந்த கலீக்யானத்தில் தேவகுருவை வென்றவர்
ஜீவர்கட்கு இம்சையில்லா தீரர்ப்போர் புரிந்தவர்
தீண்டாமையே இனி
வேண்டாமென் றே தெரிவிக்கும் (கா)

தேசத்திற்குழைத்து வாடி தேகமுமெலிந்தவர்
சிமைத்துரை மக்களை சிரித்து வசியங்கண்டவர்
ஆசையுடன் மன்னர்வேண்ட அருள் விருந்தாய்ச் சென்றவர்
அன்னகாரமில்லாமல் ஆத்ம சக்திகொண்டவர்
ஆண்டவனார் இடும
ஆணையிலே நடக்கும் (கா)

தாழ்ந்தவரைத் தாங்குவதில் தயைகாட்டும் புண்ணியர்
தாய்நாட்டு சமுகத்துக்கா தாரமூட்டுங் கண்ணியர்
வாய்ந்த கதராடைதன்னை வளரச்செய்யும் லாவண்யர்
அஞ்சமதுபானம் நீக்க வகுத்திடுங் காருண்யர்
பண்டாரம் தேன் தமிழ்
வாக்ய சுந்தரன் துதி (கா.)

(காந்தி உபவாச கீதம்.)

பல்லவி

ஆத்ம யாகம் பூர்த்தி செய்தார்
அரிஜன உயிர்த் தோழன் காந்தி (ஆ.)

அநுபல்லவி

சாத்மீகரென்ற தர்ம சித்தாந்தி
சத்ய தெரிசன பரம வேதாந்தி (ஆத்

தொகையரா.

ஸ்ரீமுகசித் திரைத்திங்கள் இருபத்தாறில்
ஜெயபீஷ்ம விரதங் கொண்டார்
தேவிதாஸ் சரோஜினி மகாதேவ் பிரார்த்திக்க
தேன்பழச் சாறு நீர் உண்டார்
தீமுகத் தீண்டாமை ஒழியவே பரிசுத்தம்
தோநேர் வழியைக் கண்டார்
தீரனிரு பத்தோர் தினம் பட்டினித்தவம்
செய்வதாய் உபதேசம் விண்டார்

(பாட்டு)

தேசமக்கள் தெய்வ தோத்திரம் பாட
மாசற்ற பாரத மாதா கொண்டாட (ஆத்)

தொகையரா

சிறைவாசம் நீங்கியே தாக்கர் சேர் பர்ணகுடி
சேர்ந்த காருண்ய மூர்த்தி
சேவைபெற வந்ததொரு அரிஜனச் சிறுவனிடம்
தேருதலே சொன்ன நேர்த்தி
முறையாகவே சட்ட மறுப்பெல்லாம் நிறுத்தவே
மொழிந்திட்டார் அறிக்கை பூர்த்தி
ன் வந்து சர்க்காரும் சமரசம் பெருகவே
முயன்றிட்டார் இதுவே கீர்த்தி

பாட்டு

மோகன தத்வவி வேக புன்சிரிப்பில்
லோகவுத்தாரண த்யாகமுந் தெரிவித்து (ஆக்)

தொகையரா

பந்த விரதம் வைகாசி பதினான்கி னிலுற்ற
பகல் திங்கள் பூர்த்தியாக
இந்து முகமது பார்ஸி ஏசுமத கீதமுடன்
இனிய கஸ் தூரி மாதா
தந்தபயு ரசமுண்டு அன்சாரி கைலாகு
தரக்காலன் தனேயே வென்றார்
இந்துமுப் பதுகோடி ஜனத்தலைவர் வெற்றிபெற
இக்காலம் வாழ்த்துவோமே

பாட்டு

முக்கிய தேச பக்தி உபதேசிக்க
சற்குண பாஸ்கரன் கீதம் பிரகாசிக்க (ஆக்)

டாக்கி சினிமாவில்

மிஸ். T. P. ராஜலெக்ஷிமி

(கிளிக்கண்ணி)

அருமை பெருமையுள்ள அழகுள்ள என் கிளியே
பரிவுமொழி பகருவாயே கிளியே
அன்பாய்முத்தம் தாகிளியே

பஞ்சவர்ணக் கிளியே கொஞ்சவாராய் கிளியே
சஞ்சலம் தவிர்த்திடவே கிளியே
இன்பக்கனியுரை கிளியே

தக்ஷகன் பெண்கொண்டுள்ள தன்மொழிப் பச்சைகிளியே
இச்சையால் வருந்திடுமென் கிளியே
இன்பமுத்தம் தாகிளியே

அரசு புரிவதென்றால் அரிவா யெளி தல்லடி
சிரசிலணியுங் கிரீடம் கிளியே
அலங்காரமோ சொல்லடி

மன்னன் மன்னென்பதும் மகிழும்பட்டமோ சொல்வாய்
எண்ணும்போல் எளிதல்லடி கிளியே
எங்கி மனம் மயங்காதடி (அருமை)

பல்லவி

காதலாகினேன் சாமி
கலந்தணைவா யென் காமி (காத)

அநுபல்லவி

மாதர்க்கெல்லாம் அழகியாள் நானே
கோமானே (காத)

சரணம்

உன்னழகால் நானே உருகினேன் பூமானே
உன்னைக்கூடி இன்பம்தானே இன்று சேரவே வந்தேனே
இன்னுமென்ன தாமதம்
எந்தனைக் கலந்தணைவாய் [காத)

தக்கப்பணி நான் புரிவேன் தழுவிச்சுகந் தருவேன்
பக்கத்துணையாய் வருவேன் பகைவரையும் வெல்லுவேன்
பக்ஷம் வைத்து எந்தனை
பாலிப்பது நீதியல்லோ (காத)

மாஸ்டர் S. G. கிட்டப்பா, செங்கோட்டை.

பிளேட் நெ. L.B.E. 8 } மாதரசே மயிலே / மாமதுரித { இந்துஸ்தான்

பல்லவி

மாதரசே மயிலே ஆசை மா

அநுபல்லவி

மௌனமாகுமோ குயிலே மயிலே ஆசை மா
நீதயவு புரிவாய் இனி
நீதயவு புரிவாய் எந்தன்
நேரிளையே வருவாயே ஆஹா மாத
மா மலராளனையே முனம்
மா மலராளனையே பொல்லா
மா மலராளனையே அம்
மதவேள் செயு
வேதனையே சகியேன் எந்தன்
கோமளமே மகிழ்வாய் எனைக்
குலவச்சமயம் வருவாயே ஆசை மா

பிளேட் நெ. L.B.L. 5	தசரதராஜ தேவாசுர	இராகம்-காபி தாளம்-ஆதி

பல்லவி

தசரத ராஜ குமாரா அலங்காரா
அதிதீரா சுகுமாரா
இசை பெருகிய ரகுவம்ச சிலாக்யம்
எழில் பிதுர் வாக்ய பரி பாலன யோக்யம்
வசை தவிர் அதனால் வரும் பெரும் பாக்யம்
உன் மனதினில் உணர் தம்பி
பரதா சுகபுனிதா சத்யவிரதா அதிரதா தச
கோசலை மகிழும் விநோதா குணநீதா ரகுநாதா அதீதா
தாய்செய்த வினையினால் தமியன் நொந்தேனே
தரணியிகழும் தன்மையே யடைந்தேனே
நேயமோ டுமதடி யிணைப்பணிந்தேனே
நிச்சயமிது கதி வாரும்
துயர்தீரும் அருள்தாரும் காருமே கோ

ஷை பிளேட் பின்புறம்.

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

தேவாசுர குலத்தோரே
திவ்ய அமுதம் உமக்கேத்
தரேன் பொறுப்பீரே தேவா

கேவலமிதே கலகம்
கண்யவான் நீர் செய்தால்
கேலிபேசு மிவ்வுலகம்
விரோதம் வேண்டாம் இதை விட்டு
நீர் இருப்பீரே விவேகமாக
இதையே நீர் கவனிப்பீரே தேவா

பிளேட் நெ. L. B. E. 12 } எல்லோரையும் அன்றொருநாள் { சுத்த சாவேரி ரூபகம்

பல்லவி

எல்லோரையும் போலவே நீ
எண்ணலாகுமோ மோடி போடி எல்

அநுபல்லவி

வல்லமை சேர்ந்தருள் செல்வனெனுஞ் சுப்பிர
மண்ணியனிடத்தில் கண்ணிய மில்லாமலே எல்

சரணங்கள்

சாடைதெரிந்து கொள்ளவேண்டும்
தந்திரமாகவே விள்ள வேண்டும்
சேடியர்போ தனையை நிக்ரகஞ்
செய்து தள்ள வேண்டும்
மோடி யென்னடி பாலும் பதக்கும்
மோரும் பதக்கென் றுரைக்கத் தகுமோ
முக்கிய மதா னையயன்
சக்கியம் சிந்தாமணி
பொக்கிஷ மென்று நினைக்கவேண்டு மல்லால் எல்

ஷை பின்புறம்.

விருத்தம்

அன்றொரு நாள் குட்டி அருஞ்சிறையி லிட்டேன் நான்
இன்றதனை யெண்ணி எனைவருத்த தந்திரத்தால்
வள்ளி யிவளைப்படைத்து மையல் சிறையிலெனைத்
தள்ளி படைத்தான் பிரமன் தான்

பல்லவி

நமஸ்தே மத் ப்ராணநாதா ஜகன்னாத நம

அநுபல்லவி

ஸமான ரஹித மாதவ
ஸுபா மஹித ஸுமாஸ்ரநம நம

சரணம்

ஆகமாந்தர ஸஞ்சார
ஆனந்த ஸுபாகா
ஸாகர கம்பீரா
ஸந்தா ரதரண ம்ருதுசரண
பாகவதா வனதீக்ஷா
பண்டித பாக்ஷா நம

S. V. சுப்பையா பாகவதர்.

பிளேட் நெ. G. E. 18 } யுவதி ஸ்ரீமதி இங்குவந்த தங்கை { இராகம்-குறிஞ்சி. தாளம்-ஆதி.

'சிவதீக்ஷாபரு' என்ற மெட்டு

பல்லவி

யுவதி ஸ்ரீமதி மா ரதியே ஓ யுவ

அநுபல்லவி

பூஷணி பூண்ட பெண்மணி தருணி

சரணம்.

புவன சிங்கார மகா
பூவையே நாயகியே
பூததி பெற்ற புனித வனித யுவதி
அவனியில் பாஸ்கரனின்
ஆனந்த கீதம்பாடி
ஆசை கொண்டேனே அன்னமே மனமே

பின்புறம் - விருத்தம்

பஞ்சத்தால் வடமதுரை பாழாக
தங்கையேழு பாலரோடு
கொஞ்சத்தில் இல்லை அவள்படும்பாடு
கோலமதாய்
நெஞ்சாத்தூக் கனவு கண்டேன்
கிளியே மானே

பாட்டு

இங்கு வந்த தங்கை எங்கே எங்கே
அவள் எங்கே
எங்கே
அவள் பஞ்சத்தால் மிகமெலிந்து
யேழு பாலரோடு இங்கு வந்த
தங்கை எங்கே
அவள் எங்கே
எங்கே

சங்கீத வித்வான் **S. V. சுப்பையா பாகவதர்.**

பிளேட் நெ.	கார்த்திகேய	இராகம்-தோடி.
G. E. 64	பாகம் 1-2	தாளம்-ஆதி.

பல்லவி

கார்த்திகேய காங்கேய கௌரிதனயா
கருணாலய அருள் திரு கா

அநுபல்லவி

கீர்த்திமேவும் தென்பரங்குன்றில் திருச்செந்தில்
பழனி சுவாமிமலை மேவும் வளர் கா

சரணங்கள்

குன்று தோறு மழகர் கோயில் தனிலும்
குன்றமனைய ஈராறு தோள்களோடு
குஞ்சரமென உலவும் சரவணபவ கா

மகபதியும்	விதியும்	தொழு
மாதங்கவதனு	சகோதரா	அழகா
வேல் மருவும்	அமலகா	கமலா
குருநகை	தவழ்	ஆறுமுகா
விரைவுகொள்	மயூராதி	மேல்
வரும் குமரா	சூரசம்மாரா	கா

சரணம்

காமினி புவியவி ஏாமிசுதனின் திரு
நாமனெனும் புகழுரை கலியுகதேவதையே
தேவர்கள் தொழு தயாநிதியே
குழந்தையைக் காவலுடன் காத்து
கடாக்ஷித்திடுவாய் கா

D. R. முத்துலட்சுமி, மதுரை

V. E. 8	திருப்பரங்கிரிவளர் காதல் கொண்டேன்	செஞ்சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

திருப்பரங்கிரி வளர் தேவாதிதேவா திரு

அநுபல்லவி

தேவாதிதேவா தீரனே வா வா திரு

சரணங்கள்

விருப்புடன் நேராய்
வேண்டினேன் சீராய்
விகசித மயில்மிசை வேகமாய் வாராய் திரு

காவடி வேலா
கதியருள் சீலா
கஜமுக னுக்கிளைய காருண்ய லோலா திரு

ஷண்முக நாதா
சங்கரன் போதா
சரபமயில் பழனி சாமிக் கருள்நாதா திரு

ஷை பின்புறம்

'தேசாபிமானிகளே' என்றமெட்டு

பல்லவி

காதல் கொண்டேன் கண்மணியே! என்
ஆருயிரைக் காத்தருளும் பெண்மணியே!
உன்மீதிலுண்மை கா

மகுடங்கள்

காரணி பூரணி சுதந்தர
தாரணி வாரணி இதந்தர கா

கஞ்சத்தாள் கெஞ்சித்தாள் அதிசுக
மிஞ்சத்தாள் கொஞ்சித்தாள் மருவிட கா

கருத்தில் நினைத்தபடி கிரமிக்க
வருத்தமனைத்து மகற்றயிருக்க கா

கலவித் தொழி லற்புத விற்பனி உனை
குலவிப் பழகத் தருணத்தினில் மிக கா

தொகையறு

செந்தமிழினின் குருமுனிவ னமர்ந்திருக்கும்
பொதியமலைக் சிகரத் தென்றல்
சந்ததமும் புலியெனவே சீறிவர மதியனல்போல்
தகிக்க மாரன்
கந்தமலர்க் கணைதொடுத்துக் கதரிடவே
வருத்துமிந்தக் காலந் தன்னில்
சொந்தமுடன் அபயமளித் தளித்திடவே
தகுந்தபெருந் துணைவி நீயே.

பாட்டு

கரும்புதின்றிடக் கூலிதனை
விரும்பி நின்றிடக் கேலி
கட்டுக் கதைகளை வீணிலே நம்பிக்
கெட்டுச் சடமத நோயிலே வெம்பிக்

காலம்போக்காதே மணக்
கோலம்புரிந்தால் குணம்
காக்ஷிதரும் இல்லறமே பாஸ்கர
சாக்ஷிதரும் நல்லறமே சாஸ்வத

V.E.1. | உனக்கே தாரம் கோரிவரந்தாரும் | இராகமாலிகை.

பல்லவி

உனக்கே தாரம் நானல்லடா
இனி வாதுதவாதடா உன

மகுடங்கள்

இனிக்கப்பேடி எனக்கருளிட
ஏதுவாது கருதிட
வேதிடாது நிலவிட உன
நினைத்தோடி வந்தவேடன்
நேசங்கொள்ளல் நீதியோடா
பேதித்தெனை வாதிப்பது
சோதித்திட நீதியல்ல உன

அநுபல்லவி

காமலாகிரி வாதனையாலே
கத்துகின்றாய் நிற்மூடா

சரணம்

அன்பிலாக் கலியாணமே ஆவதாலுண்டாகுணமே
தென்புடன் நீ
தினைப்புன மடுத்தெனைக்
கெடுத்திட நினைத்திட உன

ஆறுமா கனமா தினைப்புன மங்கை நான்
மங்கை நான் இனி
வாது பேசிட அடாதடா உன

ஷை பின்புறம்.

கோரி பஜம்துனு என்ற மெட்டு.

இராகம் பிம்பளாஸ், தாளம்-ஆதி.

பல்லவி

கோரிவரம் தாரும் கோலாகலக்குமர
குமரஷண்முக வடிவேலா கோ

அநுபல்லவி.

நேரினில் எந்தனை வேறொரு மைந்தனை
நீ முகம் பார்த்தருள் சிலா கோ

சரணம்

நீலமுந் துலங்க மயூரா மரகத
நினைக்காதலிக்க வருவாயே
நெஞ்சில் வாசம்
கொஞ்சம் நேசம்
நீதி பரவிடும்ஞான நேசம்
நித்யானந்தமே கொண்ட பிரகாசம் கோ

V. E. 39 எந்தமானிட வேடர் நீர்காண் சகானு

விருத்தம்

எந்த மானிடவேடர் நீர்காண் வேட்டைக்
கேற்றமான் மலையிலுண்டு இம்மான் நம்பி
தந்தமான் உமது வலைக்கு அகப்படாமான்
சவுரியமான் தைரியமான் ஜாதிமான் நான்
அந்தமான மதனனங்கள் தனக்காற்றமல்
ஆண்பிள்ளை ஒரு பெண்பிள்ளை யிடம்பயம்போட்டு
சொந்த அம்மான் மகள்போலேதோதோ சொல்லுகிறீரென்
தோழியைவிட்டு அடித்துத்துரத்துவேனே

செங்கோட்டை எஸ். ஜி. கிட்டப்பா

கொடுமுடி மிஸ். கே. பி. சுந்தராம்பாள்

வேலுமயிலுந் துணை.

கொடிமுடி

மிஸ். K. B. சுந்தராம்பாள்

பிளேட் நெ. L.B.E. 17 } ஈராறு காதிலே

இராகம்-தோடி.

ஈராறு காதிலே யான்சொன்ன மொழியிலே
யெள்ளளவும் கேட்க விலையோ
இக்கலியுகத்திலே பற்பல கிரியிலே
யென்னென்ன புதுமை செய்தாய்
பாரான பெரிய மெய்ஞ் ஞானபண்டிதா உன்
பன்னிருகண் யில்லையோ சொல்
பாவையர்கண் மோகமாய் அருணகிரி செந்தமிழ்
பாட்டுமேல் நினைவுற்றாயோ
சீரான பொற்கடக மணியுமணி மார்பனே
தேவர்பணி பொற்பாதனே
செட்டிமகனே தங்கக் கட்டிமணியே யிந்த
தெந்தினம் செய்யலாமா
திராகெம் பீராசெந் தூராவொய் யாரா
சேவற்கொடிக் கதிபா
தேவர்சிறை மீட்டசெல்வா என்திருமுகம்
பார்த்தருள் தென்பரங்கிரி வேலனே

பிளேட் நெ. L. B. E. 9 } மோக்ஷமு கலதா
ஆடஜென்மமு

இராகம்-ஸாரமதி, தாளம்-ஆதி.

அநுபல்லவி

ஸாக்ஷாத் காரநீ ஸத்பக்தி
ஸங்கீதஞான விஹீனுலகு மோ

பல்லவி

மோக்ஷமு கலதா புவிலோ ஜீவன்
முக்துலுகா னிவாரலகு மோ

சரணம்

பிராணனலசம் யோகமு வல்ல
ப்ரணவ நாதமுஸப்த ஸ்வரமுலேபாக
வீணவாதனலோ லுடௌசிவமனு
விதமெரு கருதியா கராஜ வினுத மோ

பிளேட் நெ. } பித்தந்தெளிய
L.B.E. 15. } வாளிப்பாய்ந்தொருமான் { செஞ்சுருட்டி

இராகம் செங்கலா, ரூபக தாளம்.

பல்லவி

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது பேரின்பமன்றுளே

அநுபல்லவி

மற்றமருந்துகள் தின்றாலு முன்னுக்கு வல்லே
வலமேலே ஐயோ அடிமை பித்

சரணம்

பாம்பும் புலியுமெய்ப் பாடுபட்டுத் தேடி
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்த திரு மாயனும் வேதனும்
பார்த்துக் களித்ததுண்டு

பார்வதி யென்றொரு சீமாட்டி யதில்
பாதியைத் தின்றதுண்டு இன்னம்
பாதியிருக்குது பறையா நீயும் போய்
பாரென்றுத்தாரந் தாருந் தாரும் அடிமை பி

ஷெபின்புறம் ஹிந்துஸ்தான் வர்ணமெட்டு

வாளி பாய்ந்தொரு மான்
வந்த துண்டோ? வள்ளி! வா

அநுபல்லவி.

வேல் விழிமானே மாதே மாதே வேல்விழி மானே
கண்டதுண்டோ? வள்ளி வேல்விழி மாதே! நீ
கண்டதுண்டோ? வள்ளி! வா

சரணம்

கொம்புகளிரண்டுண்டு கோகில முகமுண்டு
கொஞ்சிப் பேசும கொஞ்சிப் பேசும் கிளி
குரலுமுண்டு வள்ளி!
மத்தக முகமுண்டு மருகில்லா உடலுமுண்டு
மானே யெனைக்கண்டால்! மருள்வதுண்டு வள்ளி வா

L.B.E. 20	வாழையடி வாழை பாகம் 1 & 2	இராகமாலிகை

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டமரபினில்
யாரொருவனன்றோ வகையறியேனிந்த
வேழைபடுமபாடுலகத்திருவுளச்சம்மதமோவிது தகுமோ
விதுமுறையோ விது தருமந்தானோ
மாழைமணி பொதுநடனஞ்செய் வள்ளால் யானுனக்கு
மகனலனோ நீ யெனக்கு வாய்த்த தந்தையலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின்னருளொளியைக்
கொடுத்தருளிப் பொழுதே.

L. B. E. 16 } ஆண்டவன் தெரிசனமே / நானேன் ஏவினேன் { ஹிந். அசாவேரி

ஆண்டவன் தெரிசனமே த்யாகேசன்
தாண்டவ தெரிசனமே
பூண்டிடும் நாக குண்டலமாட
வேண்டும் அடியார் வினையோட
த்யாகேசன் தாண்டவ
மத்தளந் தாரை மகிழ்திருச் சின்னம்
சித்தம் களிகூறவே த்யாகேசன் ஆண்

இராகம் ஸிந்துபைரவி, பின்புறம்.

பல்லவி

நானேன் ஏவினேன்
உனைத் தூதாக நா

மகுடம்

மான் விழியே செந்தேன் மொழியே
வீண் பழியே சொல்லா வுலகில் நா

அநுபல்லவி

ஊரெங்கும் தூறி உடலெங்கும் கீறி
உனைக் கொலைவைத்தான் மத மீறி
ஷண்முகன் உனைக் கொல வைத்தான் மத மீறி
பணக்காரியென்றே நா

தந்நிடை தளர சங்கமாய் குளிர்
தந்தக்குறிபட்டு இதழ் வெளிர
முருகன் தந்தக்குறிபட்டு இதழ் வெளிர
மொழி குளறத்தணியே நா

பிளேட் நெ. G. E. 31 } முன்னம் ஒரு சன்யாசி / பவளக்கொடி { இராகமாலிகை

விருத்தம்

முன்னம் ஒரு சன்யாசி வடிவாக்கி
சுபத்திரையை மணம் முடித்து வைத்தாய்
பின்னமொரு அல்லியெனும் பேராளைப் பேணித்தந்தாய்
என்னருமை மைத்துனனே மைத்துனனே

ஷை பின்புறம்

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

'கௌனமிசேயரா' என்ற இந்துஸ்தான் மேட்டு.

பல்லவி

பவளக்கொடியின் மீதிலாசை மறப்பேனோ நானே
அந்த பவளக்கொடி

அநுபல்லவி

மறப்பேனோ நானே மாயபிரானே
மார்க்கமொன்று சொல்ல நீர்
மயங்குவது சரியல்ல அந்த
மாதரசி மீதிலாசை மறப்பேனா நானே

கண்ணபிரானே இது
புண்ணியந்தானே
எண்ணுதலேனே நான்
அவலேசத்தாலே அதிர்ஷ்டம் மென்மேலே
அரும்பவளம் கொள்ள இதில்
அருமையது வல்ல அந்த
காமியாசை மறப்பேனோ நானோ பவ
அவளன்றியேது இப் புவியில் கிட்டாது
அழகென்ற போது அருள்வாயிப்போது
அவலேசத்தாலே

பிளேட் கே. G.E. 16 } ச்ருங்காரலகரி 1-2 பாகம் { இராகம்-நீலாம்புரி. தாளம்-ஆதி.

பல்லவி

ச்ருங்கார லகரி ஸ்ரிதஜன ஸுககரி ச்ரு

அநுபல்லவி

ஸங்கீதாம் போஜா னந்த
மது மாதுரி மதமதகரி மங்களாங்கி
மதனாரி மனோகரி மாமவ ச்ரு

சிட்டா ஸ்வரம்

ஸா ரிஸ் நிப ஸநிபம கம பா
கமபஸ் நிப கமபநி
ஸரிஸ்நி ஸ்நிபம பநிபம பமகமரிகமரி கரி
பா மா காம பநி

ஸ்ஸ்நிப நிநிபம பபமக பநிதநி
மகபம நிபஸ்நி பமகம பநிதநி
பதப பமகஸ பமகஸ நிபமகஸ ஸ்நிபமகஸ
ரிஸ் நிபம காம பநி சரு

அங்கஜாரி ஹ்ருத யங்கம தாஹ ஸிதே அகிலாகம ஸன்னு
ப்ருங்க சிகுரே கருணாரஸ பர பரிதே [தே
துங்க ஜனக லலிதே ஸாரஸவிதே
லிங்க ராஜ வசனும்புஜ பூஜிதே சரு

G. E. 74. வாடை தருமலர்

இராகம்-பைரவி

பல்லவி

வாடை தருமலர் ஓடை வாய்த்தது கண்டு
மதனும் ரதியும் போலயிருப்பதில் தடையென்னடி வா

அநுபல்லவி

கோடுயிற் தேனுரை
குலவிக் கலவியை
குறிப்பதும் தடுப்பதும்
உனக்குத் தகுமோடி வா

சரணம்

ஜாடையென்ன சரசாங்கி உனதுமையல்
சகிப்பதருமை சந்ததமுனே விடுகிலேன் வா

G. E. 88 } காட்டில் வளர் பாகம் 1-2 { செஞ்சுருட்டி

நொண்டிச் சிந்து

காட்டில் வளர் வேட்டுவப் பெண்ணே! என்மான்
வாட்டமுற்று நாட்டமுடன் வந்தடுத்தமான்
கானில் புல்லை புசித்திடாமான் பெண்மான்
கண்மணியே! புள்ளியொன்று மேவிடாத மான்
பாசிமரு வற்ற சிறுமான்—நல்ல
வாசியான கொம்புடன் வளர்ந்த யிளமான்
அம்புவியிற் சொல்லுறுதிமான்—அந்த
கம்பனும் வர்ணிக்கயேலா கட்டழகுமான்
திக்கெட்டிலும் மிக்கப்புகழ்மான்—என்
வலைக்கெட்டி தலைதப்பி வந்தடுத்தமான்
தங்கநிற தங்கமுள்ளமான்—அது
பங்கமில்லா சிங்கம் போலிடை சிறுத்தமான்
தந்திடுவாய் எந்தன் சுகமான்—மனம்
தாங்குதில்லை ஏங்குகிறேன் பாங்கியதனால்
தந்திடுவாய் எந்தன்சுகமான்

G. E. 112 } தேனே மாங்கனியே மலர்சூடி விளையாட { காபி அமீர் கல்யாணி

பல்லவி

தேனே மாங்கனியே திவ்யமோகினியே தே

எடுப்பு

நானே உன்மேல் காதல் கொண்டு
தானே நின்று வாடினேன்

எந்தன் நாயகியே நீ யெதிர்வா
நேயமாகப் பாடினேன் வருவாயினியே தே

தொகையரா

வானோர் புகழ்ந்திடும் மாமதுர வசனியே
வாணமயிலே என் கண்ணே
வாது செய்யாமலே பாதுகாத்தருளுவாய் இன்ப
வல்லிப்பருவப்பெண்ணே

பாட்டு

மாசிலாத நேசியே உன் ஆசையாலே வாடினேன்
மார்க்கமோன தீர்க்க ஞான
பாஸ்கரன் சொல் பாடினேன் தே

G. E. 99] நம்பினோரைகைவிடுதல் [காபி

பல்லவி

நம்பினோரை கைவிடுதல் ஞாயமா
ஞானபண்டிதா என் யிதாயமா

அநுபல்லவி

அம்பிகையின் பாலாகுகா
ஆதிகுரு நாத ஷண்முகா நம்

பல்லவி எடுப்பு

தும்பிமுகன் சோதரா மஹா
ஸ்வாமி மலே மீதிலே சுஹா நம்

சரணம்

உன்னையன்றி தெய்வமுண்டோ
உண்மையது வார்த்தை ரெண்டோ
அன்னை தந்தை சேயர் பெண்டோ
அகம்வரப் பார்க்கக் கற்கண்டோ
ஆதரவான துணை நீ
தரும்போதனினை
சாதகமே தரு பாஸ்கரன்
சந்தத் தமிழ் சொந்தம் பெற
கந்தப்பனே இந்தப் புவிதனிலே நம்

பபூன் N. S. ஷண்முகம் பாடியது·

பிளேட் நெ. G. E. 4	வாங்க வாங்க மானுருட்டும்	காமிக் தெம்மாங்கு

தூக்குத் தூக்கி சரித்திரம்

வாங்க வாங்கடி லவுண்டிகளா அந்த
வாத்தியார் சட்டாம்பிள்ளையைக் கண்டிங்களா
போங்க போங்கடி பெண்டுகளா ஒரு
புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றிங்களா

நீங்கள் புத்திகெட்டுத்தானே
புறப்படுவதுமேனோ
நித்தியமுந்தானே
நிலைகுலைக்குமானே
நீலக்கருங்குயிலே நீயும் நானும் போகையிலே
சீலன் பிறக்கையிலே சிதம்பரங்காணையிலே
சிங்காரங் காணுதடி உங்கள்
ஜீவனங் கிருக்குதடி செல்லு
செல்லு திருச்சி நகர் செல்லு
திருவாரூரு செல்லு
திருமதுரை செல்லு
சிரிக்கவேண்டாம் பல்லு
ஜீனிபட்டா ஜில்லு ஜில்லு

ஷை பின்புறம்

அடி மானுருட்டுங் கண்ணழகி அடி அடியே
மணக்கோட்டு பெண்ணழகி
அடி தேனருந்துந் தினையழகி உங்கள்
சேதியல்லாந் தெரியுமடி
சிமிட்டு குட்டிகளா நீங்கள்
சீமையை விட்டிங்களா அடி
அழூட்டு காரிகளா ஊரில்
அலையப் போரிங்களா

மானு

கையோடு கைகோர்த்து அட டட என் சாமியே
கால்மாடு யிரண்டும் சேர்த்து டும் டும் டும்
பையப் பைய நடந்துவாடி
பசப்புக்கார தாசிகளா
வடமதுரையடி இங்கு
வனமிருக்குதடி பின்னே
வாங்கடி ஓடி மா

G. E. 66 } அன்பே ஆரமுதே / மன்மத பூஜையிலே { காமிக்

'கந்தா காருண்யனே' என்றமெட்டு

அன்பே ஆரமுதே எனதாருயிரே
என்பால் அன்பில்லையோ இதுதான்மலையோ அ

எடுப்பு

ஆசைவெட்க மறிந்திடாது அல்லவோ
இதை சொல்லவோ
பாச நாட்டி வருந்துவேனோ
பக்ஷமோ எனை வையவோ அ

பாட்டு

வாரய் மாமதனா துரைசாமி நீயே
தாராய் ஓர் முத்தமே சகியேன் நித்தமே அ

எடுப்பு

அந்தரங்க மறிந்திடா துயிர் தாளேனே
உயிர் தோணனே
சுந்தரம் பகர் சங்கமே உயிர் தங்கமே

பாட்டு

சொல்லாய் வாசகமே மிகவாய் மனமே
கல்லோ காருண்யமே சொல்லாய் வாசகமே அ

ஷை பின்புறம்
'கிளிக்கண்ணி' மெட்டு

மன்மத பூஜையிலே மணிமந்த்ர ஓசையிலே
சம்மதம் பேசையிலே என்கிளியே!
சாமிதுணை செய்தாரடி

உன்மனம் போலதானே உறுதியாய் நடப்பேனே
கன்மனம் ஏனே தேனே என் கிளியே!
கட்டிமுத்தம் தாராயோடி

மாணிக்கமுத்தேகண்ணே மரகதப்பெண்ணேமுன்னே
காணிக்கை லக்ஷம்பொன்னே என் கிளியே!
கண்டெடுத்துத் தாரேனடி

ஓடிக்கொள்ளுராயடி குமரியே நீயும்கூடி
வாடிக்கை உன்னைதேடி என்கிளியே!
வாக்களிப்பேன் இன்ன மோடி

G. E. 47 } பெண்சாதி நீயிருக்க / ஆசைக்கண்ணாட்டி { தங்கரத்தினம் / மெட்டு

பெண்சாதி நீயிருக்க பிள்ளை வரந்தானிருக்க
அஞ்சாது கூடவாடி என் தங்கரத்தினமே-நீ
ஆருக்குமே அஞ்சவேண்டாம் பொன்னுரத்தினமே

நாடகத்தின் கூட்டத்திலே நான் பிறந்த இஷ்டத்திலே
பாடகத்தைக் கேட்டுப்பாரு என் தங்கரத்தினமே-நான்
பாங்கான மாப்பிள்ளைதான் பொன்னுரத்தினமே

இரங்கோன் கொளும்பு முதல் மங்காத சீமையெல்லாம்
மங்காதபெயரெடுத்தேன் என் தங்கரத்தினமே-அடி
மாராட்டம் ஒன்றும்வேண்டாம் பொன்னு ரத்தினமே

நாணிலமெல்லாம்புகழும் நாகசுர வித்துவானும்
நாடுபுகழுதடி என் தங்கரத்தினமே-அதை
நானும் உரைக்கிறேண்டி பொன்னு ரத்தினமே

திருவாங்கூர் சின்னசாமி திருவெண்காட்டு சுப்ரமண்யம்
திருவாடுதுறை ராஜரத்னம் என் தங்கரத்தினமே-அந்த
திருச்சி அங்கப்பனடி பொன்னு ரத்தினமே

ஷை பின்புறம்

ஆசை கண்ணாட்டி எந்தன்
அருமை பெண்டாட்டி
தேசம் புகழ்ந்த வண்டி சிங்கார மானவண்டி
பாசம் புனைந்த வண்டி வடிவம் வாய்ந்தவண்டி ஆ
கிராமபோன் பிளேட்டி லெங்கும்
கீர்த்தியுடன் பேர் துலங்கும்
சங்கீத ரத்தினமே சுப்பையா பாகவதர்
துணைக்கி நானுமேவேன் அரமனைக்குள்ளேபோவேன்

ஆரியகான சபா அனந்த நாராயணய்யர்
அவரண்ணன் செல்லப்பா அய்யர்
ஆடிவரும் நாளேயிலே அடியேன் பெயருமுண்டு
எனதாண்மையைக் கண்டு
மட்டிலடங்கா சங்கீத
மாஸ்டர் எனவே புகழும்
கிட்டப்பா சுந்தரியை
கேட்க என் தேசிய ஞானம்
கே. எஸ். தேவு டய்யர்
ஆர்மோனியம் போட அமைந்த பெயராக

ஸ்வரஜோதி T. A. நாகசாமி பாகவதர், மதுரை

N. 8004] வைஷ்ணவ பஜனதோ [மகாத்மா காலே ஜெபம்

1 வைஷ்ணவ பஜனதோ தேனே கஹியே
ஜோபிடபராயி ஜாணெமே
பரதுக்கே வுபகாரகரே தோயே
மான அபிமான நணே ரே.

2 ஸகல லோகமா ஸௌகேவந்தே
நிந்தானகரே கேனிரே
வாசகாசமன நிஸ்கலராகே
தனதன ஜனநீ ஹாதரே.

3 ஸமத்ருஷ்டினே த்ருஷ்ணுத்யாகி
பரஸ்திரீ ஜென மாதரே
ஜிக்வதகி அஸத்யனபோலே
பரஜன நவ ஜாலே ஹாதரே.

4 மோஹமா யெ வ்யாபெ நஹிஜே நெத்ருட
வைராக்ய ஜேனே மனமாரே
ராம நாம ஸுதாலீலாகி
சகல தீர்த்த தேன் தன்மாரே.

5 வணலோபீனே கபடரஹிதசே
காமக்குரோத நீ வார்யாரே
பணே நரசையோ தேனுந்தர்சன
கர்தாங்குலே கோதேர் தார்யாரே.

கள்ளப்பார்ட் A. M. கார்மேக ஆச்சாரி

N. 8040 } நெருங்கிய சொந்தக்காரண்டி / மாமியே உன் மகளுக்கு { காமிக் / ஷடி

நெருங்கிய சொந்தக்காரண்டி அதனால் மதன்
அருங்கணை தொடுத்தாண்டி சகியேண்டி நெ
அருமைக்கிளியே மோடி செய்யாது எனை
அணைந்து சுகமே தாடி மைடியர்லேடி நெ
புருஷனுன் ஆனதாலே பூவையுனக்கோர்
புதையல் கிடைத்தாப்போலே புவிமேலே நெ
வறுமையோ காமனாலே வந்ததைத் தீர்க்க
வழியுரைப்பா யிக்காலே வனக்குயிலே நெ
தருகுவேன் பொருளுனக்கு தற்சமயம்
தையலார் வேறெனக்கு தர்க்கமெதற்கு நெ
தருணமெந்தனை நோக்கு ததிகார்மேகம்
தரணியிலோதிய வாக்கு தரும் செல்வாக்கு
தடுத்து மொழியை
எடுத்துரையாதே
கொடுத்திடு முத்தம் நெ

D. R. முத்துலக்ஷிமி, மதுரை.

L. B. E. 35. | அக்கா இவன்தான் | ஹிந்து பியாக்

தூக்குத் தூக்கி

பல்லவி

அக்கா இவன்தான் பயித்தியக்காரன்
தூக்குத் தூக்கியே அடி அக்
இவன் எக்காலும் நம்மோடிருக்க
இவன் தான் விலக்கியே ஆ ஆ அக்

அநுபல்லவி

இக்காலம் தன்னில் எவர்க்கும் கிடைக்காத இன்பமே
இவன் இக்காலப் பெண்கள் இருக்குமிடத்தில்
இன்பமே வந்திடா அக்

மிஸ். சுப்புலட்சுமி, மதுரை.

N. 3868 | ஸ்ரீ வசுதேவகுமாரா நேற்றந்தி நேரத் | செஞ்சுருட்டி உசேனி

பல்லவி

ஸ்ரீ வசுதேவ குமாரா நற்பிரியனே
ஸ்ரீதரன் தன் மருகா வடிவேலனே ஸ்ரீ

அநுபல்லவி

தேவர்க்கதிபனே தேவாதி தேவனே
தீனனென் முன்வந்து திகழ்ந்திடத் தேடினேன் ஸ்ரீ

சரணம்

மாயப்பிரபஞ்சத்தின் வாழ்வினு போதும்
மன்னிய ஜென்மாவை அடைத்திட நேறும்
சேயன் சத்திவேலனைக் கார்த்திடவோ ப்ரமாதம்
ஜீவப்ரமைக்கத்திற்கே தருவதுன்பாரம் ஸ்ரீ

மறுபக்கம்

நேற்றந்தி நேரத்திலே நீராடுங்கரை தனிலே
நெருங்கியுமை ஜாடைகாட்டி, நே

அநுபல்லவி

நேர்த்திமா மயிலேறுங் கந்தா நீரவனுமெதிர் முழியாய்
நிற்கமயிலே சொக்கையிலே பக்கந்தனிலிருந்தேன் சாமி

சரணங்கள்

பச்சிளந் தேமர்படந்த கிண்ணம் போலே ஸ்தனம்
பவள வாயுங் கருங்குழலும் கபடமில்லா மனமும்
இச்சகத்திற் காணேனந்த லட்சணத்தைப்போலேபெண்கள்
இந்திரலோக ரம்பையின் எந்த உலகரிவையோ சாமி நே
முன்னுளில் என்னிடத்தில் சொந்தம் போல வந்து
முத்து முத்தாய்ச் சரசமாடி மோகமதைத்தந்து
மன்னவா உன்நினைவுகொண்டுவண்ணங்கொண்டொருமாத [மும்
வாருமையா வென்றுரையே தீருமையா வென்கவலை நே

N. 3892. | பாதார விந்தமே ஆறுமுக வேலனடி | அமீர் கல்யாணி கும்மி

பல்லவி

பாதாரவிந்தமே பணிந்தேனனுதினமே பா

அநுபல்லவி

மாமயில் வாகனுநின் கிருபை யளிப்பாயே
ஆதார மென்றுனே அண்டினோர்க்கருள்வாயே
நாதனே அனுதினம் நலமே தருவாயே பா

சரணம்

கரிமுகன் சோதர பக்தபரிபாலனும்
ஹரி திருமருகனே சக்திவேலனே பா

மறுபக்கம்

ஆறுமுக வேலனடி அசுரரை வென்றவனடி
ஏறுமயிலேறும் வீரன் ஏகாந்த நாதனடி
எந்தன் குருநாதன் பைரவ குமரேசன்
பார்புகழ் சூரனடி பக்தர்கனுகூலனடி

காரும் கருணாநிதி கஞ்சமலர் பாதனடி
பச்சைமயில் வாகனடி பன்னிருகை வேலனடி
கெச்சை ஒலிக்கும் பாகனடி கீதஒலி பாலனடி
வாலைக்கு சிலனடி பாலசுப்ர மண்யனடி
நீலமயிலேறும் கோலால சிலனடி
மாதருறவானவண்டி மாரன்கணை தீர்ப்பவண்டி
யாதவர் குலத்துதித்த கண்ணன் மருகனடி
ஷட்கோண மூலனடி சச்சிதானந்தனடி
ஷாத்தரஹாரப் ரண வண்டி தத்வரூப மாயனடி
வாலைசத்தி சிலனடி வரத அபய அஸ்தனடி
பாலபக்தன் அருள் கவிதை வரம்தரவே புகழ்வோமடி

No. 3910. | ஏமந்துனெ முத்து | ஜாவளி

ஏமந்துனெ முத்து பாலாமணி
ஏமனிவின விந்துனே ஓ செலி ஏ

சரணம்

செலிய பல்குல செலுவுன தெல்பகனே
செலியமை மரசிதினே ஓ செலி ஏ
செலுவுனி கனிவல புணபுரி கொனிகின்
கெலுவுன் ம்ருராக்கி தினே ஓ செல் ஏ
முனி நனுதலசி மர்மகுலெரகின ஸ்ரீ
தர்மபுரீ சுன்னுடிகனு ஏ.

N. 8049 | வள்ளி மானை நேரில் வேட வேஷம் கொண்டு | தோடி கேதாரம்

வள்ளிமானை நேரில் கண்டு மையல் மீறிநான்
வடிவுள்ள முருகையன் . வள்
புள்ளிமான்க ளனேகம் ஓடபூண்புனல்
மேவிய மான்யரன் மீதினில் வள்

மறுபக்கம்

பல்லவி

வேடவேஷங் கொண்டெழுந்தான்
சிவகுமாரன் வே

அனுபல்லவி

வேடமின்மையைப் பட்டு
வேடவுருவைக் கொண்டு
வேடன் கணையில் மிக
மோகமீறி வே

K. V. கேசவ பாகவதர், மதுரை.

பாகம் 1 & 2

N. 8016 | வேணீ மூலே | இராகமாலிகா

வேணி மூலே விரசிதகன ஸ்யாம பிம்ஸாவ—சூடோ
வித்யுல்லேகா வலயித யிவஸ்நித்த பீதாம்பரனே
மமாலிங்கன் மரகத மனஸ்தம்ப கம்பீரபாஹூ
ஸ்வப்பனே த்ருஷ்டஸ் த்ருன துளஸீபூஷணோ—நீலமேஹ

N. 8039 { வா கானமயிலே / உன்னுசைவார்த்தை } ஆனந்தபைரவி ஷெ

'பாங்கான மயிலே' என்ற மெட்டு.

பல்லவி

வா கானமயிலே மதுரக்குயிலே வசன ஒயிலே
என் புனித மாதரசி வா

அநுபல்லவி

நீ கானமதிலே தானிருக்க
லாகா துயர்போகாது சொன்னேன் வா

சரணம்

மந்தமாருத வசந்த காலமிது
ஸந்தேகம் விடுவாய் சொந்த நாயகி
மாணிக்கமே பிர
மாணிக்கமே சொன்னேன்
ராணிக்குள்ளே முதல்
காணிக்கையாமே
மங்களமே தங்கும்புகழ் பாஸ்கர
ஸங்கீதம் பாடுவோம் மலர் சூடுவோம் வா

மறுபக்கம் விருத்தம்

உன் ஆசை வார்த்தையும் உனது சிங்காரமும்
உன் அழகும் என்னாளும் ஒருபோதும்
மறக்கிலேனடி ஏந்திழையே
நன் நாகரீக மயிலே உனை விடுத்து நான்
பிரிந்தால் சன்யாசி வேஷம் கொள்வேன்
சத்தியம் சத்தியமிது ஆயிழையே.

மிஸ். A. சுந்தரம், மதுரை.

N. 3739 | வேலவா வா கதிர் வடிவேலா | செஞ்சுருட்டி.

பல்லவி

வேலவா வா வா விமலனே

அனுபல்லவி

விமலனே தேவா விமலனே
வித்தயதாரா ஞான எனைக்கைவிடாதே
மென்மேலும் நானுன்பாலன்சோதிக்காதே ஐயா
வேதமே பேசும் அதீதா வேகமாய் வா ஐயா

எடுப்பு

வீடு வீடு தேடும் நாதா
அடியவர் கொண்டாடும் பாதா
கூறும் பாஸ்கர சங்கீதா
குமரா முருகா ஷண்முகா
அமராதிபர் சேவககுகா
கால மெல்லாம் பாடிப்பாடிக்
கண்டதென்ன தொண்டன் நானே வா

பின்புறம்

வடிவேலா உமைபாலா அநுகூலா கதிர் வடி

அநுபல்லவி

துடியிடை வள்ளிமோகா தெய்வானை மயில்வாகா
கண்டதென்ன தொண்டன் நானே கதி

தொகையரா

மேலான நினது புகழ் பாடவேண்டும்
மெய்யாக உருகி யுனைத் தேடவேண்டும்
மாலாம் பெண்மாய்கையை விட்டோடவேண்டும்
மறலிபய மறுத்தே கொண்டாடவேண்டும்

பாட்டு

குன்றுதோராடும் பாதா குமரபாஸ்கர கீதா
கோதில்லா நீதியருள் நாதா

N. 3905 | முருகா வாவள்ளி

பல்லவி

முருகா வரவள்ளி
மோகா மயில்வாகா முரு

அநுபல்லவி

முராரி மருகா ராணிமதுரை
ராணி மான் குமார வேல் வேல் முரு

சோமவார லங்காரத் தூயக் கிரு
பாகரா பார்மகிழ் சௌந்தரா கண்
பாரித்தருணம் முத்துச்சரணம்
நீ மகிழ்வாய் வரமீவாய்
நித்ய கல்யாணு வேல் வேல் முரு

N. 8001 } முருகனே கலியுகவரதா { செஞ்சுருட்டி
ஜோதிநிறை { இந்து தோடி

பல்லவி

முருகனே கலியுக வரத மெய்மூர்த்தி-தினம்
முழு மனதுடன் தொழுதிடப் பெருங்கீர்த்தி

அநுபல்லவி

திரு மூலாதாரமாம் பிரணவ மொழிந்தகுற்
குருவாம் முறையிடும் தொண்டர் குறையகலவே
அருள் புரிகுவான் நேர்த்தி மு

தொகையரா

முக்காலமும் பத்தி செய்தபேர் மனதிலே
மோகமாய்க் குடி கொள்வோனே
மூதண்டமே கொண்ட மாசண்டனின் பாசம்
முறியவேல் விடுங்கையனே

பாட்டு

இனி-மூவாசையு மேகளைந்திட முயன்று நின்றிடுவோம்
முது மறைபுகழ் மதுர பாஸ்கரன்
மொழியும் செந்தமிழ் பூர்த்தியாக முரு

ஷை மறுபக்கம்

'பண்டிதமோதிலால்' என்ற மெட்டு.

ஜோதிநிறைமா மதுரைச் சோமசுந்தரா ஜோ

அநுபல்லவி

சோமசுந்தரா திரு நாம மந்திரா ஜோ

சரணம்

ஆதிமறைத் தாயகனே அம்பிகையின் நாயகனே
ஆண்டவா மெய்த் தாண்டவஞ் செய்தாடும் பாதனே
ஆடும் பாதனே பக்தர் தேடும் போதனே ஜோ

சரணத் தொடர்

பாஸ்கரன் சொற்பாடினனே
பணிந்து கொண்டாடினனே
வேற்கரனைத் தந்த கிர்த்தி மிக்கத் தங்கமே
மிக்கத் தங்கமே திவ்யசொக்க லிங்கமே ஜோ

No. 8037] பூமிக்கோராறு தலையாக [நாதநாமக் கிரியை

குமரேச சதகம்

பூமிக்கோ ராறுதலையாய் வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடியும்
புனிதர்க்கு மந்த்ரஉப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில்வைத்தும்
நேமிக்க வரியரப் பிரமாதி கட்குஞ்செயிக்க
முடியாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினு லிருகூறு
செய்தமரர் சிறைதவிர்த்தும்
நேமிக்குளன்பரிட ருற்றசமயந்தனில்
நினைக்குமுன் வந்துதவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலால்
உலகிலுனை நிகரான தெய்வமுண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளிகணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு
மலைமேவு குமரேசனே.

N. 8050. } தாய்க்கிழவி { செஞ்சுருட்டி.
} ஹேமதஞ { ஹேமதஞ.

தாய்க்கிழவி தொந்தரையால் கேட்க
வந்தேனேழை யென்மேல்
தப்பிதமா யெண்ணுதீர் சாமி
உண்மையிதுவே விற்பன விவேகநந்தநேமி
பல ஜாடையா யெங்கள் ஜாதி
ஜனங்கள் சிலேடை சொல்லிலே
கேலிபண்ணுதல் சகிக்கவும் கூடுமோசாமி தா
நாய்க்கு வெண்டயம் போடுவதினுல்
நாயகனுத்தான் பெருமை நாரி
யெனக்கேதினி வுரிமை தங்களிஷ்டம் போல்
நடத்துவீர் காரியந் திறமை புது
நாகரிகமாய் நகையும் சேலையும்
லோக முழுதும் வாங்கும் பொழுதில்
நாமனுபவிக்கவே அருமை தா
பிரியமிருந்து செய்தாற்போதும்
பிடிவாதமிதிற் கிடையாதொரு
பேச்சுக்காகச் சொன்ன சேதியே நீங்களோ
வட்டி பெருக்கும் வியாபாரச்சாதியே இனி
பேதகமின்றி கலந்திருந்திடக்கீத
பாஸ்கரசாமி செந்தமிழ்ப் பெருகிடும் சேமநிதியே

மறுபக்கம்.

ஹேமதஞ ஏதனுல் வஞ்சமென்மேல் மதிவதஞ

அநுபல்லவி

வஞ்சமென்மேல் மதிவதஞ தயை
கொஞ்சமே செய் தூதியதனுல் ஹே

சரணம்

வண்டு நாணிற்
செண்டு பாணம்

மாரியைப் பூட்டுவாய்
மருதத் தேரேறி யெந்தன்
மணதைச் சும்மா வாட்டுவாய் ஷேஹ

N. 8024 } தங்கமானது தழ { மோகனம்
மாதவர் தொழு { தோடி

குமரேச சதகம்

தங்கமானது தழலினின் றுருகி மறுகினும்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் தெலிந்துதேய்ந் தாலுமோ
தன்மணங் குன்றிடாது
பொங்குமிரு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்விடாது
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட்டாலுந்
துலங்குகுண மொளியாதுபின்
றெண்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறுகுமோ
மங்கள்கல் யாணிகுற மங்கைசுக குஞ்சரியை
மருவுதின் புயவாசனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு
மலை மேவு குமரேசனே.

மறுபக்கம்.

பல்லவி

மாதவர் தொழும் மதுரை மீனாக்ஷி உந்தன்
மகாதரிசனை யருளாட்சி மா

அநுபல்லவி

ஸ்ரீதரன் சகோதரி பூ நாதனின் சமேதரி
ஸ்ரீதேவி சங்கரி தயாபரி மா

சரணம்

ஆதியாம் பரம் ஜோதிகண்டு
அருள் கட லானந்தங் கொண்டு
பூதலமிசை புரிந்தோன் தொண்டு
புவிப்ரபல கவிப்பனுரைகு
விப்புருளுத விப்பதமீ
தாய்க்கழகு சேய்க்கினிய
தாய்கனியும் வாய்க்கமுது
தருவது முறையிது
தருணம் வருகுவாய் திருவடி
சரணம் தவமணியே
பவவினை தீர் இவனஞ்சதா
சிவதுணை நீ மா

No. 8013. } ஏழைபடும் பாடு { புன்னாகவராளி.

ஏழைபடும் பாடுனக்குச் சம்மதந் தானோ
இன்னும் இரக்கமில்லாத கன்மனம் ஏனோ ஏ
கோழையான கோதைமீதிற் கோபமாகுமா
கோபாலகிருஷ்ண யிந்தப் பெண்பாபம்போகுமா ஏ
எண்ணி யெண்ணிப் பாவிநெஞ்சம் ஏங்குகின்றதே
இவ்வுலக பாசபந்தம் ஓங்குகின்றதே ஏ
மண்ணினுறு வெண்ணையுண்ட மாயக்கண்ணனே
மாதவாஸ்ரீ பாஸ்கர சங்கீத வண்ணனே ஏ

T. M. காதர்பாஷா, உறையூர்.

No. 3871] இந்தவேளை யார் போய் [செஞ்சுருட்டி
'நீயே கதியே' என்ற மெட்டு

யார்போய் சொல்லுவார் இந்த வேளை யா

பார்புகழ் வேந்தனுக்கு பதி
பத்தினிமகனையும்
பரிகொடுத்திட்டப் பாவி பரந்தான் பதி
துறந்தானென்று யா
யாரையும் நம்பாமலே அரோகரா சிவாவென்று
பேரையே தினம் சொல்லித் துதிப்பான் கரங்
குவிப்பான் என்று யா

ஆர்மோனியம் A. S. ராஜப்பா, கோயமுத்தூர்.

No. 2810] நாத சங்கீதப்பொன் [புன்னாகவராளி
செஞ்சுருட்டி

நாத சங்கீதப்பொன் மணிமண்டபம்
நயனத் திடைநடுவில் நடனங்கண்டேன்
நாவைமடக்கியே மேல்வாசல்
நவீனமதுவருந்த அருள்வாயே
ஞானவேலா ஞானவேலா
நவமணிபதித்தொளிர் ஞானவேலா ந
முத்தொடுபவளமும் பச்சையுமா
முக்சுடரொளிமணி முழக்கமெனும்
சுத்தஅற்புத திச விதநாதம்
தொனிக்குதெனக்குள் சுதிலயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனெனையினிப் பரிசோதியாதே
கமலமென்மலரிதழ் மணவாழும்
கௌரிகுண்டலிதுபில் கலந்திடவே
சமரசமோனசு காதீத
தாரகப்பிரணவ சுழிமுனையின்
சாமகீதா சாமகீதா
நவரிஷிமகிழ் சாமகீதா

மனோரஞ்சினி அச்சுக்கூடம், சௌகார்பேட்டை, சென்னை.

புத்தக விளம்பரம்

பெரிய ரேடியோ கிராம்போன் சங்கீதம்

0 பாகங்களடங்கியது. புதிய பாடல்கள்.

. B. சுந்தராம்பாள், S.G. கிட்டப்பா, C. சரஸ்வதிபாய், அரியக்குடி T. ராமாநுஜ அய்யங்கார், S.V. சுப்பையா பாகவதர், D.R. முத்துலமிக்ஷி, P. S. சிவபாக்கியம், M. சாரதாம்பாள், A. S. செல்லப்பா, M. கண்ணம்மாள், K. S. தேவுடு அய்யர், பலூன். N.S. ஷண்முகம், V. அபயாம்பாள், T.N. மாணிக்கம், T.A. நாகசாமி பாகவதர், T.M. ராமலிங்கம், M.R. வாசுவாம்பாள், P. S. வேலுப்பிள்ளை, இன்னும் பிரபல சங்கீத வித்வான்கள் பாடிய பெரிய ரேடியோ கிராம்போன் சங்கீதம்.

10-பாகங்கள் அடங்கியது	விலை ரூ.	0	3	0
ஷை 20-பாகங்கள் அடங்கியது	விலை ரூ.	0	6	0
காவடி வேல்ப்பாட்டு		0	1	0
புதிய ஏரோபிளேன் பாட்டு		0	1	0

மேல்கண்ட புஸ்தகமும் இன்னும் மற்ற புஸ்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு விலை சாசமாகவும் கீழ்கண்ட விலாசதாரிடம் நேரிலும் V. P. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம் :—

A. M. சந்நியாசியா பிள்ளை,

புக் ஷாப்,

பெரிய கடை வீதி,

திருச்சினாப்பள்ளி.

CENN